# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.05.30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## மருத்துவம் (திருத்தம்)

***(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*சுகாதார அமைச்சர் அவர்கள் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம் அமைச்சரினால் ஆக்கப்படக்கூடியனவான ஒழுங்குவிதிகள் தொடர்பில் குறித்த சில கருமங்களைச் சேர்ப்பதற்கென (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

**வாசகம் 3 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 19இ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 19இ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் தொடர்பில் மருத்துவப் பேரவையினால் செய்யப்பட்ட ஏதேனும் விதப்புரை தொடர்பாக அமைச்சருக்கு மதியுரையளிப்பதற்குக் குழுவொன்றை நியமிப்பதற்காக ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம் "ஏதேனும் பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம்" என்னும் சொல்லமைப்புக்கான தெளிவான விளக்கத்துக்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 19உ இனைத் திருத்துகின்றது.

**வாசகம் 5 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

ச.வ.ஓ.2/2024

**(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 105 ஆம் அத்தியாயத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (ஊ) என்னும் பந்தியில், "மருத்துவக் கல்வியைப் பேணுதல்". என்னும் சொற்களுக்குப் பதிலாக "மருத்துவக் கல்வியைப் பேணுதல்;"; அத்துடன்

(2) அதன் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(எ) அங்கீகரிக்கப்பட்டவொரு பல்கலைக்கழகத் தினால் அல்லது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஏதேனும் பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஏதேனும் மருத்துவத் தகைமையை அங்கீகரிப் பதற்கும் அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்குமான கட்டளைக்கற்கள்;

(ஏ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத் தினால் அல்லது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஏதேனும் பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மருத்துவத் தகைமையை அங்கீகரிப்பதில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத் தின் அல்லது நிறுவனத்தின் சர்வதேசத் தரவரிசைப்படுத்தலையும் வகுதிப்படுத்து தலையும் கடைப்பிடிப்பதற்கான கட்டளைக் கற்கள்;

(ஐ) அங்கீகரிக்கப்பட்டவொரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டங்கள் தொடர்பான ஏதேனும் மருத்துவத் தகைமையை அங்கீகரிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஒ) ஏதேனும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் பட்டம் தொடர்பான ஏதேனும் மருத்துவத் தகைமையைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளுக்காக இலங்கையில் மருத்துவ அல்லது பல்மருத்துவத் தொழிலைப் புரிவதற்கான ஏதேனும் பரீட்சை தொடர்பில் மதிப்பீட்டுக் கட்டளைக்கற்களும் நிபந்தனைகளும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19இ என்னும் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19இ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(2அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்டவொரு பல்கலைக்கழகத்திடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து எவையேனும் கருத்துரைகளைப் பெற்றதன்மேல் அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் மருத்துவப் பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரையுடன்சேர்த்து அத்தகைய கருத்துரைகளைப் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ள குழுவொன்றுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்:-

(அ) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது மேலதிகச் செயலாளர் (மருத்துவச் சேவைகள்);

(ஆ) சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி; அத்துடன்

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களும் மருத்துவத்துறையில் உள்ளவர்களுமான மூன்று வேறு மேன்மைதங்கிய பேராசிரியர்கள்.

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(3) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் மருத்துவப் பேரவையினால் செய்யப்பட்ட விதப்புரையையும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தினால் அல்லது நிறுவனத்தினால் செய்யப்பட்ட கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றையும் பரிசோதனை செய்தபின்னரும், உட்பிரிவு (2அ) வின்கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் கலந்தாலோசனையுடனும்-

(அ) ஒரு மருத்துவத் தகைமையை வழங்குவதற்கு அல்லது அளிப்பதற்கு இட்டுச்செல்கின்றதும் அத்தகைய பல்கலைக்கழகத்தினால் அல்லது நிறுவனத்தினால் வழங்கப்பட்டதுமான கற்கை நெறி;

(ஆ) அத்தகைய தகைமையை வழங்குவதற்காக அல்லது அளிப்பதற்காக அத்தகைய பல்கலைக் கழகத்தினால் அல்லது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் தேவைப்படுத் தப்பட்ட திறமையின் அளவு;

(இ) அத்தகைய கற்கைநெறிக்காக அத்தகைய பல்கலைக்கழகத்தினால் அல்லது நிறுவனத் தினால் வழங்கப்பட்ட பணியாட்டொகுதியின

ரும், சாதனங்களும், இடவசதியும் மற்றும் வசதிகளும்,

விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இசைந்தொழுகவில்லையெனத் திருப்திப்படுமிடத்து, அவர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இக்கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப் படுவதற்கு அத்தகைய தகைமையைக் கொண்டுள்ளவரை இயலச்செய்கின்ற இக்கட்டளைச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தேதியிலிருந்து அத்தகைய பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் தொடர்பாக அல்லது அத்தகைய பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள ஏதேனும் நிறுவனம் தொடர்பாகப் பயனில்லா தொழிதல் வேண்டுமென வெளிப்படுத்துதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19உ என்னும் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19உ என்னும் பிரிவு, "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "ஏதேனும் பல்கலைக் கழகம் அல்லது நிறுவனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம், அல்லது உள்நாட்டிலாயினுஞ்சரி அல்லது வெளிநாட்டிலாயினுஞ்சரி அத்தகைய பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள ஏதேனும் நிறுவனம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், பந்தி (ஆ) (ii) (ஆஆ) வில், "மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டி ருக்கின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக்கப்படவேண்டியவாறு மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (1) ஆம் உட்பிரிவில், பந்தி (ஆ) (iv) (ஆஆ) (i) இல், "மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்

பட்டிருக்கின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக்கப்படவேண்டியவாறு மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (2) ஆம் உட்பிரிவில், பந்தி (ஆ) (iii) (ஆஆ) (i) இல், "மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக்கப்படவேண்டியவாறு மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அதன் (2) ஆம் உட்பிரிவில், பந்தி (ஆ) (iii) (ஆஆ) (ii) இல், "மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக்கப்படவேண்டியவாறு மருத்துவப் பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதோ" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**6.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*